# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 10428/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

| | |
|---|---|
| **முன்னிலை** | **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.**<br>**மாநில தகவல் ஆணையர்.** |
| **மனுதாரர்:** | திரு M. கார்த்திகேயன்<br>மேனேஜர், டாஸ்மாக்,<br>திருவண்ணாமலை . |
| **பொது அதிகார அமைப்பு:** | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டாட்சியர் அலுவலகம்<br>திருவண்ணாமலை . |

***

மனுதாரர் திரு M. கார்த்திகேயனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம் திருவண்ணாமலை அவர்களும் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 16.2.09 அன்று 2 இனங்களில் ஒரு சில கோப்புகளைப் பார்வையிட அனுமதிக்குமாறு மனு செய்துள்ளார். எந்தத் தகவலும் கிடைக்காததால் 23.3.09 அன்று மேல் முறையீடு செய்துள்ளார். 2.5.09 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 8.5.09 அன்று பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து கடிதம் பெறப்பட்டதாகவும், 21.5.09 அன்று உரிய கோப்புகள் மனுதாரரால் பார்வையிடப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரர் உரிய கோப்புகளை பார்வையிட மனு செய்தால், வருங்காலங்களில் அனுமதி அளிப்பதில் கால தாமதங்களைத் தவிர்க்கும்படி பொதுத் தகவல் அலுவருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**மாநில தகவல் ஆணையம்**

**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**உதவிப் பதிவாளர்**

பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை .

திரு M. கார்த்திகேயன்
மேனேஜர், டாஸ்மாக்,
திருவண்ணாமலை .